# சோலார் மின் திட்ட விழிப்புணர்வு



கோவை, அக்.15: கோவை காளப்பட்டி நேரு நகரில் கோவை மாநகர், ஒண்டிப்புதூர் கோட்டம் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் பிரதம மந்திரி சூரிய வீடு மின் திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரிய மின் பேனல்கள் அமைப்பது குறித்த விழிப்புணர்வு முகாம் நேற்று நடந்தது.

இந்த முகாமில், கோவை மண்டல தலைமை பொறியாளர் சுமதி பங்கேற்றார். கோவை மாநகர் மேற்பார்வை பொறியாளர் சந்தநாயகி தலைமை வகித்தார். ஒண்டிப்புதூர் செயற்பொறியாளர் பிந்து முன்னிலை வகித்தார்.

இம்முகாமில், வங்கி அதிகாரிகள், சோலார் வெண்டர்கள், நுகர்வோர்கள், மின்வாரிய அதிகாரிகள் மற்றும் மின்வாரிய பணியாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சூரிய சக்தி மின் திட்டத்திற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில், அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்று சோலார் மின் திட்டம் குறித்து விளக்கங்கள், சந்தேகங்களை அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்துக் கொண்டனர்.

இது குறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில்,"தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், வீடுகளில் சூரிய மின் பேனல்கள் அமைக்க ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. அதன்படி, 1 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின் அமைப்புக்கு ஒன்றிய அரசு ரூ.30 ஆயிரம், மாநில அரசு ரூ.5 ஆயிரம் என மொத்தம் ரூ.35 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

2 கிலோ வாட் அமைப்புக்கு முறையே ரூ.60 ஆயிரம், ரூ.10 ஆயிரம் என ரூ.70 ஆயிரமும், 3 கிலோ வாட் மற்றும் அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட அமைப்புகளுக்கு ரூ.78 ஆயிரம், ரூ.22 ஆயிரம் என மொத்தம் ரூ.1 லட்சமும் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கவும், விண்ணப்பங்களை பெறவும் கோவையில் சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது. இந்த முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்" என்றனர்.

## ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும்

# கோவை மாநகராட்சியில் 50-க்கும் மேற்பட்ட பணிகள்?

## திமுக தீர்மானக்குழு மாநில செயலாளர் நா.கார்த்திக் மனு



கோவை சிங்காநல்லூர் கிழக்குமண்டலம் தொடர்பான வளர்ச்சி திட்டங்கள் தாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க கோரி, முன்னாள் எம்எல்ஏவும் திமுக தீர்மான குழு செயளாலருமான நா.கார்த்திக் மாநகராட்சி கமிஷனர் கட்டா ரவி தேஜாவிடம் நேற்று கோரிக்கை மனுஅளித்தார்.

கோவை, அக். 15: மாநகராட்சியில் ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் 50-க்கும் மேற்பட்ட ஒப்பந்த பணி வழங்கப்பட்டு இருப்பதாக திமுக தீர்மானக்குழு மாநில செயலாளர் நா.கார்த்திக் மாநகராட்சி கமிஷனரிடம் மனு அளித்தார்.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், தெருவிளக்குகள், பூங்கா பராமரிப்பு மற்றும் சாலை சீரமைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி, திமுக மாநில தீர்மானக் குழு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா.கார்த்திக், மாநகராட்சி கமிஷனர் கட்டா ரவி தேஜாவிடம் மனு அளித்தார்.

மேலும், அந்த மனுவில் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், ஏற்கனவே நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவற்றை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும், என கூறியிருந்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: திமுக ஆட்சிக் காலத்தில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பணிகளுக்கான மதிப்பீடுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், பணிகள் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றை மீண்டும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவை மாநகராட்சியில் ஒரு சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் 50-க்கும் மேற்பட்ட ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது. இதில் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்களைச் சந்திப்பதில்லை. இதனால் பொதுமக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தொகுதியில் சாலைப் பிரச்னை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்னைகள் நிலவி வருகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல தொகுதியில் மதுபான விற்பனை தொடர்பாக வெளியாகியுள்ள வீடியோ விவகாரத்தில் காவல்துறையினர் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

உடன் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியம், வட்டக்கழகப் பொறுப்பாளர் டவுன் பா.ஆனந்த், முன்னாள் கவுன்சிலர் கேசவன், நிர்வாகிகள் தனபால், சி.டி. சி. நடராஜ், பாலச்சந்திரன், அருண், சுந்தர்ராஜ் ஆகியோர் இருந்தனர்.

# மதுபோதையில் தாக்கியதில் வாலிபர் சாவு

## பக்கத்து வீட்டுக்காரருக்கு 7 மாதம் சிறை

கோவை, அக். 15: மது போதையில் தாக்கியதில் வாலிபர் உயிரிழந்த விவகாரத்தில் பக்கத்து வீட்டுக்காரருக்கு 7 மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கோவை ஒத்தக்கால் மண்டபம், திருவள்ளுவர் வீதி, தங்கையன் லைன் வீட்டை சேர்ந்தவர் விஷ்ணு (27). அதே பகுதியை சேர்ந்தவர் ராஜேஷ்கண்ணன் (29). இந்த நிலையில் கடந்த 2022ம் ஆண்டு ராஜேஷ் கண்ணன் மது போதையில் விஷ்ணுவிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். அதனை அவர் தட்டி கேட்ட போது ஆத்திரம் அடைந்த ராஜேஷ் கண்ணன், விஷ்ணுவை தாக்கி, அங்கிருந்த இரு சக்கர வாகனத்தின் மீது தள்ளி விட்டார். அதில் பலத்த காயம் அடைந்த விஷ்ணு மயங்கி கீழே விழுந்தார்.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அங்கிருந்தவர்கள் விஷ்ணுவை மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி விஷ்ணு பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து செட்டிப்பாளையம் போலீசார் ராஜேஷ் கண்ணன் மீது கொலை வழக்கு பதிவு செய்தனர். பின்னர் இவ்வழக்கு, நீதிமன்ற விசாரணையின் முடிவில் சாதாரண அடிதடி வழக்காக மாற்றப்பட்டது. தொடர்ந்து இந்த வழக்கு கோவை மாவட்ட முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நீதிபதி செந்தில் குமார் நேற்று இவ்வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கினார்.

அதன்படி குற்றவாளி ராஜேஷ் கண்ணனுக்கு 7 மாத சிறைத்தண்டனையும், ரூ. 7 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் கோவிந்தராஜு அந்த வழக்கில் ஆஜரானார்.


மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோவை
M.P. No. 1 of 2026
In
CRL.A. No /2026
IN
(D.V.A NO. 177 OF 2025)

S. வினோதினி -மனுதாரர்

-எதிர்-

S. அருண் கணேஷ்,
த/பெ. சுந்தர் ராஜ், இந்து, வயது 31,
வசிப்பிடம்: டோர் நம்பர் 7,
பெருமாள் கோவில் ஸ்ட்ரீட்,
இடிகரை, கோயம்புத்தூர்-640 022.
-எதிர்மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள காலதாமத மன்னிப்பு மனுவில் (Condone Delay Petition) உத்தரவு வழங்க கோரி தாக்கல் செய்து உள்ளனர். மேற்படி மனுவானது வருகின்ற 26.10.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆட்சேபனை உள்ளவர்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவும். தவறும்பட்சத்தில் மேற்படி மனுவானது ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

M.SARAVANAN,
Advocate, Coimbatore.


## கூடலூர் நகராட்சியில்

# மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு



கூடலூர் நகராட்சியில் பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பெ.நா.பாளையம், அக். 15: கோவை கூடலூர் நகராட்சியின் சார்பில், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2026-ன் கீழ், பொதுமக்கள் குப்பைகளை நான்கு வகைகளாக தரம் பிரித்து வழங்குவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கூடலூர் நகராட்சி 1-வது வார்டுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலை பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசின் அறிவுரையின்படியும், நகராட்சி ஆணையர் கோபிநாத் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாணவ, மாணவியர்களுக்கு வீடுகள் மற்றும் பொது இடங்களில் உருவாகும் குப்பைகளை அவற்றின் தன்மைக்கேற்ப 4 வகைகளாக பிரித்து வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதில் உணவுக்கழிவுகள், காய்கறி மற்றும் பழக் கழிவுகள் போன்ற மக்கும் தன்மையுடைய கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், காகிதம், பிளாஸ்டிக், உலோகம் உள்ளிட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகளை மக்காத கழிவுகள் எனவும், பயன்படுத்திய பேட்டரிகள், காலாவதியான மருந்துகள் மற்றும் இதர அபாயகரமான வீட்டுக் கழிவுகள் எனவும், மின்னணுக் கழிவுகள், உடைந்த கண்ணாடிகள் மற்றும் தனியாகக் கையாள வேண்டிய பிற சிறப்புக் கழிவுகள் எனவும் பிரிக்கப்பட வேண்டும் என்றும், மேலும், குப்பைகளைப் பொது இடங்களிலும் சாலையோரங்களிலும் கொட்டாமல், வீடுகளிலேயே தரம் பிரித்து நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என்றும், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# பேரூர் பட்டீஸ்வரர் சாமி கோயில் யானை கல்யாணியின் 36வது பிறந்தநாள்



தொண்டாமுத்தூர், அக்.15: கோவை பேரூர் பட்டீஸ்வரர் சாமி கோயில் நிர்வாகம் சார்பில் வளர்ப்பு யானை கல்யாணி பராமரிக்கப்பட்டு வருகிறது. கோவை வரதராஜா மில்ஸ் கம்பெனி சார்பில் முதுமலையில் இருந்து காமாட்சி யானையின் இரண்டாவது பெண் குட்டி வரவழைக்கப்பட்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கல்யாணி என பெயர் சூட்டினார். தொடர்ந்து கோயில் கனக சபை மண்டபம் அருகே கோயில் யானை பக்தர்களிடம் பணம் பெறுவதில் புகாரை தொடர்ந்து காலை, மாலை இரு நேரம் மட்டும் கோயிலுக்கு வந்து சென்று மீண்டும் கொட்டகையில் யானையை கட்டி வைக்கின்றனர். மாதந்தோறும் கால்நடை மருத்துவர் குழுவினர் கல்யாணியின் உடல்நலம் குறித்து கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று மாலை கோயில் வளர்ப்பு யானை கல்யாணியின் 36ம் ஆண்டு பிறந்தநாள் விழா கோயில் சார்பாக நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் கோவை மண்டல இணை ஆணையர் ரமேஷ், கோயில் உதவி ஆணையர் சத்யவதி மற்றும் பலர் பங்கேற்றனர்.

# குட்கா, புகையிலை விற்ற ஒடிசா வாலிபர் கைது



குமார் சிங்.

சூலூர், அக்.15: கோவை மாவட்டம் சூலூர் அருகே தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை விற்பனை செய்வதாக சூலூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் சூலூர் சப்-இன்ஸ்பெக்டர் யுவராஜ் கண்ணம்பாளையம் பிரிவு பகுதியில் உள்ள ஒரு கடையில் சோதனை நடத்தினார். அப்போது, அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் விற்பனை செய்து வந்தது தெரிய வந்தது. அங்கிருந்து 40 கிலோ புகையிலை பொருட்களை பறிமுதல் செய்த போலீசார் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பிரதாப் சிங் மகன் குமார் சிங் (39) என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கோவையில் வக்கீல்கள் ஆர்ப்பாட்டம்



கோவை, அக். 15: இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி விலக வலியுறுத்தி கோவை நீதிமன்ற வளாகம் முன்பு மக்கள் சிவில் உரிமை கழகம், இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில், தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும், எஸ்ஐஆர் நடைமுறைகளை கைவிட்டு, பறிக்கப்பட்ட வாக்குரிமைகளை திரும்ப வழங்க வேண்டும், போராடும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களை ஒன்றிய அரசு ஒடுக்க கூடாது என்பதனை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். இதில் 30-க்கும் மேற்பட்ட வக்கீல்கள் கலந்து கொண்டனர்.


OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194 / +91 98840 62068/ +91 9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) ஃபுல்லெர்ட்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும், நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி (வளாகத்திற்குள் உள்ள அசையக் கூடியவை நீங்கலாக) சொத்து அதாவது அசையா சொத்துகள் மட்டும் விற்பனை செய்யப்பட உள்ளது. ஏலதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், வருமான வரி மீட்பு அதிகாரி, சென்ட்ரல்–2, சென்னை அவர்கள், திரு. கே. தங்கவேல் செலுத்த வேண்டிய வரி பாக்கிக்காக, இந்தச் சொத்தை 31.10.2017 அன்று ஜப்தி செய்துள்ளார். இது வில்லங்கச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தச் சொத்து, ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் (எங்கள் ஒதுக்கீட்டாளர்) நிறுவனத்திடம், 14.10.2011 தேதியிட்ட, வடவள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆவண எண் 5894/2011 கொண்ட பதிவு செய்யப்பட்ட அடமானப் பத்திரத்தின் மூலம், அதற்கு முன்பே அடமானத்தில் உள்ளது.
கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

| | | | |
|---|---|---|---|
| கடன்தாரர் & உப கடன்தாரர் பெயர் | திரு. K. தங்கவேல் & திருமதி.T கல்யாணி | | |
| கடனீட்டுச் சொத்து விவரங்கள் : 21.05.2009 தேதியிட்ட வடவள்ளி சார் பதிவு அலுவலக விற்பனை பத்திர ஆவண எண்.1793/2009 இன்படி திரு. K. தங்கவேல், த/பெ, திரு.காளியப்பனுக்குச் சொந்தமான சொத்து. கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், வடவள்ளி கிராமம், SF No.480 பகுதி, 480/2A 481/2A பகுதி, 481/1 பகுதி, 481/2 பகுதி 488/B1 பகுதி–இல் உள்ள புஞ்சை ஏக்கர் 4.25 பரப்பளவு உள்ள மொத்த நிலம் வீட்டுமனைகளாக டி.டி.சி.பி. அங்கீகார எண்.230/2002, தேதி 17.9.2002 இன்படி உருவாக்கப்பட்டுள்ள ஜெயலட்சுமி நகர் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள பகுதியில் மனை எண்.29 பின்வரும் எல்லைகளை உடையது. வடக்கில்: 30 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, கிழக்கில்: மனை எண்.27 மற்றும் கடை மனை, தெற்கில்: மனை எண்.28, மேற்கில்: 23 அடி அகல தெற்கு வடக்கு சாலை, மேற்கூறப்பட்ட எல்லைகளுள்ள சொத்தின் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.45 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.35 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.40 அடி. தென்கிழக்கு மூலையில் 7அடி.மொத்தம் 1988 ச.அடி அல்லது 4 சென்ட்கள் 245 ச.அடி அல்லது 184.69 ச.மீ. பரப்பளவு உள்ள நிலத்துடன் ஆர்சிசி கட்டிடம் லேஅவுட் சாலைகளுக்கான வழக்கமான உரிமைகளைப் பெற்றுள்ளது. இந்த சொத்து SF No.481/1 பகுதி, மற்றும் வடவள்ளி நகராட்சி எல்லைக்குள் உள்ளது. | | | |
| சொத்து உரிமையாளர்: திரு. K. தங்கவேல் | | | |
| 13(2) அறிவிப்பு நாள் 02.02.2022 | நேரடி சுவாதீனம் நாள் 30.09.2025 | 14.10.2026 தேதியின்படி நிலுவை: ரூ.1,68,47,310/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு லட்சத்து நாற்பத்தேழாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்) | |
| நிர்ணய விலை: ரூ.1,05,00,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) | முன்வைப்புத் தொகை– நிர்ணய விலையில் 10% :– ரூ.10,50,000/– (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் | ஏலம் உயர்த்தும் தொகை:– ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) | சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| கணக்கு விவரம்:– | கணக்கு எண்:– 344905000929, பயனாளி பெயர்:– ஓம்காரா PS22/2020–21, டிரஸ்ட், வங்கி பெயர்:– ஐசிஐசிஐ வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449 | | |
| மின்–ஏலம் நாள் & நேரம் 04 நவம்பர் 2026 (புதன்கிழமை) முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை. | ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் 02 நவம்பர் 2026 (திங்கள் கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக | | |

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 15.10.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 15.10.2026
இடம்: சென்னை

( ராஜேஷ் பி ஜுமானி)
கைபேசி எண். 98840 62068
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)



OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194 / +91 98840 62068/ +91 9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) ஃபுல்லெர்ட்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு: வேலண்டிபாளையம் வட்ட உதவி ஆணையர் (வணிக வரிகள்), வணிக வரித் துறை அலுவலகக் கட்டிடம், கோயம்புத்தூர் 641 018 அவர்கள், திருமதி A. கமலா இத்துறைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளுக்காக, 19.08.2015 மற்றும் 26.03.2024 ஆகிய தேதிகளில் (இம்மீதுள்ள வில்லங்கச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) இப்பொதுச் சொத்தை முடக்கம் செய்துள்ளார் என்று ஏலதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது; எனினும், இப்பொதுச் சொத்தானது, வடவள்ளி சார்–பதிவாளர் அலுவலகப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட, பதிவு ஆவண எண் 7218/2010, நாள் 28.12.2010 கொண்ட அடமானப் பத்திரத்தின் வாயிலாக, மேற்கூறிய தேதிகளுக்கு வெகு முன்னரே ஃபுல்லர்டோன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடம் அடமானத்தில் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் திருமதி. A கமலா க/பெ: அனில் குமார் பிஷோனி (கடன்தாரர்/அடமானதாரர்) மற்றும் திரு. அனில் குமார் பிஷோனி (உப–கடன்தாரர்) | | | |
| கடனீட்டு சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கவுண்டம்பாளையம் கிராமம், S.F. எண். 312/2B இன்படி சென்னை நகர்ப்புற திட்ட இயக்குநர் வழங்கிய அனுமதி எண்.LP/D.T.C.P. எண். 633/96 இன்படி, வீட்டு லே அவுட்டானது "ஷாஜ் லிபர்டி கார்டன்" என்ற பெயரில் மாற்றப்பட்டுள்ளது. இதில் மனை எண்.111 இன் எல்லைகள் மற்றும் அளவீடு பின்வருமாறு: எல்லைகள்: வடக்கில்: கிழக்கு மேற்காக 23 அடி லே அவுட் சாலை, தெற்கில்: மனை எண்.106, கிழக்கில்: மனை எண்.112, மேற்கில்: மனை எண்.110. இதனிடையே அளவீடு: கிழக்கு–மேற்காக வடக்கு பக்கம்–40 அடி, கிழக்கு–மேற்காக தெற்கு பக்கம்–40 அடி, தெற்கு–வடக்காக கிழக்கு பக்கம்–50 அடி, தெற்கு–வடக்காக மேற்கு பக்கம்–50 அடி என 2000 ச.அடி அல்லது 4 செண்ட் 258 ச.அடி அல்லது 185.80 ச.மீ கட்டடத்துடன் கூடிய காலி நிலமானது கவுண்டம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சி அனுமதியின்படி தரை மற்றும் முதல் தளம் கட்டப்பட்டு 868 ச.அடி பரப்பில் கட்டப்பட்ட ஆர்சிசி கட்டடமானது தரை மற்றும் முதல் தளத்தில் 129 ச.அடி போர்டிகோ பகுதியானது அனைத்து பொருத்துதல் மற்றும் இணைப்புகள் ஆகியவற்றுடன் லே அவுட் சாலைகள் மற்றும் அனைத்து பொது நடைபாதைகளை பயன்படுத்தும் உரிமைகளுடன் அமைந்துள்ளது. இதற்கான மின் சேவை இணைப்பு எண்.101–006–641. இந்த சொத்து கவுண்டம்பாளையம் நகராட்சியில் தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளின் கீழ் அமைந்துள்ளது. | | | |
| சொத்தின் உரிமையாளர்: திருமதி. A கமலா க/பெ: அனில் குமார் பிஷோனி | | | |
| 13 (2)கோரிக்கை அறிவிப்பு நாள்: 01.02.2022 | கையக சுவாதீன நாள்: 19.03.2024 | 14.10.2026 தேதியின்படி நிலுவை: ரூ.1,09,25,710/– (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று பத்து மட்டும்) | |
| நிர்ணய விலை: ரூ. 60,00,000/– (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்) | முன்வைப்பு தொகை – நிர்ணய விலையில் 10%:– ரூ. 6,00,000/– (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) | ஏலம் உயர்த்தும் தொகை:– ரூ. 30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) | சொத்து பார்வையிடல் மற்றும் நேரம்:– மேலே குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியின் மூலம் பெறப்பட்ட முன் அனுமதியின்பேரில் |
| கணக்கு விவரம்:– | கணக்கு எண்:– 344905000929, பயனாளி பெயர்:– ஓம்காரா PS22/2020–21, டிரஸ்ட், வங்கி பெயர்:– ஐசிஐசிஐ வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449 | | |
| மின்–ஏலம் நாள் & நேரம் 04 நவம்பர் 2026 (புதன்கிழமை) நண்பகல் 12.00 முதல் பகல் 01.00 வரை. | ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் 02 நவம்பர் 2026 (திங்கள் கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக | | |

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 15 (பதினைந்து) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 15.10.2026 முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி / கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 15.10.2026
இடம்: சென்னை

( ராஜேஷ் பி ஜுமானி)
கைபேசி எண். 98840 62068
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)